**புதுப்பிக்கத்தக்க சக்தி உறிஞ்சல் பரிமாற்ற அபிவிருத்திச் செயற்திட்டம் - 2018**

---

புதுப்பிக்கத்தக்க சக்தி உறிஞ்சல் பரிமாற்ற அபிவிருத்திச் செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிகூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பிரான்சிஸ் டி அபிவிருத்தி முகவரிற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2015 ஒக்தோபர் 02 ஆம் திகதிய 101104 எல் ஆம் இலக்க கடன் உடன்படிக்கை மற்றும் 2016 நவம்பர் 18 ஆம் திகதிய சீஎல்கே 101104 எல் ஆம் இலக்க திருத்தப்பட்ட கடன் உடன்படிக்கையின் 3.4.3(எச்) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. சீஎல்கே

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

செயற்திட்டக் கடன் உடனபடிக்கைகளின் பிரகாரம் மின்வலு, வலுசக்தி மற்றும் தொழில்துறை அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் இலங்கை மின்சார சபை செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவராக உள்ளது. எரிசக்தி மின்சார விநியோக அமைப்பு உறிச்சல் இயலளவை அதிகரித்து சராசரி உற்பத்திக் கிரயங்களை குறைப்பதன் மூலம் தேசிய மின்சார விநியோக அமைப்பிற்கு புதுப்பிக்கத்தக்க சக்தியை உறிஞ்சுதலே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் மாலிபொட, வெவல்வத்த, நாவலப்பிட்டிய, றாகல போன்ற இடங்களில் 132/33 கேவி உப மின் நிலைய நிர்மாணம் என்ற பெயரில் நான்கு கூறுகளின் கீழ் அமுலாக்கப்படுகின்றன. கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 6,660.10 மில்லியனிற்குச் சமமான யூரோ 41.10 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 4,865.90 மில்லியனிற்குச் சமமான யூரோ 30 மில்லியன் பிரான்சிஸ் டி அபிவிருத்தி முகவரால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மீதி ரூபா 1,794.20 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. செயற்திட்டம் அதனது நடவடிக்கைகளை 2016 ஏப்ரல் 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2019 ஒக்தோபர் 30 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

என்னனுடைய அறிக்கையின் அட்டவணை 2.1 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கையில் முகாமைத்தவமானது தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவாக தொருவதற்கு, பிரயோகிக்கக் கூடியவையாக வெளிப்படுத்தல், தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவுடன் தொடர்புபட்ட விடயங்கள் மற்றும் செயற்திட்டத்தின் திரவத்தன்மைக்கு முகாமைத்துவம் அல்லது குறித்த தரப்பினர் கணக்கீட்டின் தொடர்ந்து செல்லும் அடிப்படையை பயன்படுத்தல் அல்லது நெகிழ்ச்சித் தன்மையுடைய மாற்றுவழியை உருவாக்கல் அல்லது வைத்திருத்தல் ஆனால் அதேபோல செய்வதற்க ஏற்றவாறு செயற்திட்டத்தினை மதிப்பிடுவதற்காக பொறுப்புடையது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்கள் இயலக்கூடியவாறு சகல வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் என்பவற்றின் முறையான புத்தகங்கள் மற்றும் ஏடுகள் பேணுவதற்கு செயற்திட்டம் வேண்டப்பட்டள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ்

கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| அ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் கூற்றில் காட்டப்பட்ட ரூபா 1,252.91 மில்லியன் தொகையான பெறுகைகள் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 907.47 மில்லியன் தொகையான கைதவிர்ப்புகளுடன் உடன்பட்டிருக்கவில்லை. | 345.44 | நடைபெறும் வேலைகள் குறைத்தக் கூறல் | கடனளிக்கும் முகவரிடமிருந்து பெறப்பட்ட மீளப்பெறுகைகளின் உறுதிப்படுத்தல்கள் அவர்களால் செய்யப்பட்ட கொடுப்பனவுகள் என்பன 2018 ஆம் ஆண்டிற்காக இலங்கை மின்சார சபையால் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் கவனத்திற் கொள்ளப்பட்டிருந்தது. | கடனளிக்கும் முகவரால் உறுதிப்படுத்தப்பட்ட ரூபா 345.44 மில்லியன் தொகை கவனத்தில் எடுக்க வேண்டிய தேவையிருந்தது. |
| ஆ) | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 893.16 மில்லியன் தொகையான இலங்கை மின்சார சபையின பங்களிப்புகள் தவறான கணக்கீட்டு சுத்திகரிப்பு காரணமாக ரூபா 3.63 மில்லியனால் அதிகரித்துக் கூறப்பட்டிருந்தது. | 3.63 | அதிகரித்துக் கூறல் | பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் பிரகாரம், நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்காக அட்டுறு அடிப்படை பின்பற்றப்பட்டிருந்தது. | கணக்கீட்டு தவறுகளை திருத்தவதற்கான தேவையிருந்தது. |

### 2.2. சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| நிதி மற்றும் திட்டமில் அமைச்சின் 2007 ஆகஸ்ட் மாதத்தின் எம்ஓஎவ்பி/ஈஆர்டி/2007/02 ஆம் | 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட பிரதான | கருத்து தெரிவிக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் உரிய திகதியில் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| இலக்க சுற்றறிக்கை | 31 அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென வெண்டப்பட்ட போதிலும் 2019 ஏப்ரல் 10 இலேயே சமர்ப்பிக்கப்பட்டிந்தது. | தேவைப்படுகளை பின்பற்றப்படாமை | |

### 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

செயற்திட்டத்தின் செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம், சப்ரகமுவ மாகாணத்தில் மாலிபொட மற்றும் வெவல்வத்தவிலும் மத்திய மாகாணத்தில் நாவலப்பிட்டிய மற்றும் றாகலவிலும் உப மின் நிலைய் செயற்திட்ட காலப்பகுதியின் போது நிர்மாணிக்கப்பட வேண்டுமென எதிர்பாரக்கப்பட்டது. செயற்திட்டத்தின் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், உப நிலைய கட்டிடம் மற்றும் பரிமாற்ற வரிசைகளின் நிர்மாணங்களின் கீழான ஒட்டுமொத்த முன்னேற்றம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அடைப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட 42 சதவீதத்தை விட பின்தங்கி 37.5 சதவீதத்தில் இருந்தது. எவ்வாறாயினும், வழங்கப்பட்ட 15 ஒப்பந்தங்களில், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மூலப்பொருட்கள் மற்றும் பொருட்கள் வழங்கல் மீதான 03 ஒப்பந்தங்கள் அவற்றினை பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

### 3.2 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் அவாதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1978 திசெம்பர் 31 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையில் வேண்டப்பட்டவாறு செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு செயற்திட்டத்தின் நிலையான சொத்துப் பதிவேட்டினை முறைப்படி பேணியிருக்கவில்லை. | சொத்தக்களின் உள்ளதன்மையை மெய்மையாய்வு செய்ய முடியாமை | கணக்காய்வு தேவைக்காக நிலையான சொத்தப் பதிவேடு கிடைத்திருந்ததுடன் சகல கிரய நிலையங்களிலும் நிலையான சொத்து விபரங்கள் பெறமுடியும். | நாளதுவரையாக்கப்பட்ட வழியில் நிலையான சொத்தப் பதிவேடு பேணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) நிதிப் பிரமாணம் 134(3) மற்றும் 2010 யூலை 26 ஆந் திகதிய 05 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம், செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் இலங்கை மின்சார சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவால் கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கட்டப்பாடு முறைப்படி அமுலாக்கப் பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கவில்லை | செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் உள்ளக கணக்காய்வு பிரிவால் கணக்காய்வு செய்யப்பட வேண்டும். |